---

**கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் இணை அலுவலர் சேவை வகையின் சட்ட உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் கோரல் - 2025 (2026)**

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் இணை அலுவலர்; சேவைப் பிரிவில் சட்ட உதவியாளர் பதவி வெற்றிடம் ஒன்றினை (01) நிரப்புவதற்காக தகுதியான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பதவியின் பெயர் - சட்ட உதவியாளர்
   சேவை வகை - இணை அலுவலர்
   வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01

2. **கல்வித் தகைமைகள்** :

   பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சட்டத்துறையில் பட்டம் பெற்றிருத்தல்.

3. **சம்பளம்** :

   I. சம்பளக் குறியீட்டு இலக்கம் : MN 4 – 2025 (பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன்படி)
   II. சம்பள அளவுத்திட்டம் : ரூ. 53,060 -10x800 – 11x1,190 – 10x1,320 – 5x1,350 – ரூபா 94,100.00
   III. சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவு கொடுப் பனவு வழங்கப்படும்.

4. **வயது** :

   விண்ணப்ப ஏற்பு முடிவுத் திகதியில் வயது 21 வருடங்களிற்கு குறையாமலும் 35 வருடங்களிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **உடற்றகைமை :**

   ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்த வொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6. **வேறு தகைமைகள்** :

   I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
   II. விண்ணப்பதாரர்கள் சிறந்த குணாதிசயங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   III. பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவை யான அனைத்து தகைமைகளையும் 2026.06.05 ஆம் திகதியில் சகல விதத்திலும் பூர்த்தி செய் திருத்தல் வேண்டும்.

7. **ஆட்சேர்ப்பு முறைமை** :

   அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட இந்த அறிவித்தலின் 08 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளியிடல் நடைமுறைக்கு அமைவாக நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

8. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் புள்ளி வழங்கும் முறைமை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

| *பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் துறைகள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *தெரிவுக்குப் பரிசீலிக்கப்படும் ஆகக்குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள்* | 20 | பொருந்தாது |
| மேலதிக தொழில்சார் தகைமைகள்* | 15 | |
| அனுபவம் * | 30 | |
| மொழி ஆற்றல் * | 15 | |
| தகவல் தொழில்நுட்பம் தொடர்பான தகைமைகள் * | 15 | |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தப்படும் திறன் | 05 | |
| மொத்தம் | 100 | |

* தகைமைகளை எழுத்து மூலம் நிரூபித்தல் வேண்டும்.

9. **நியமனத்தின் தன்மை** :

I. இப் பதவி நிரந்தரமானது மற்றும் ஓய்வூதியத்துடன் கூடியது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக எதிர்காலத்தில் அரசாங்கம் எடுக்கும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு இது உட்பட்டதாகும்.
II. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் நியமனம் பெறும் திகதியிலிருந்து மூன்று (03) வருட பரீட்சார்த்த காலத்திற்கு உட்பட்டு நியமிக்கப்படுவார்கள்.
III. நியமனம் பெறுபவர்கள் தீவின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கு கடமைப்பட்டவர்கள்.
IV. நியமனம் பெறுபவர்கள், நியமனம் தொடர்பாக அரசாங்கத்தால் விதிக்கப்படும் ஏனைய தேவையான நிபந்தனைகளை உரிய முறையில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

10. **விண்ணப்பிக்கும் முறை** :

I. மாதிரி விண்ணப்பப் படிவம் இந்த அறிவிப்பின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் போன்றே, தாங்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மொழி மூலத்திலேயே அதனைத் தயாரித்தல் வேண்டும். அத்துடன், அதனை தமது சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்ய வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் ஒவ்வொரு பகுதியையும் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறே விண்ணப்பதாரர் பூர்த்தி செய்ய வேண்டும். தமக்கு பொருந்தாத பகுதிகள் இருக்குமாயின், அவற்றை "பொருந்தாது" எனக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் வெற்று நிரல்களை விடுவது நிராகரிக்கப்பட வாய்ப்புள்ளது என்பதை உறுதியாக நினைவில் கொள்ளவும். (மாதிரி விண்ணப்பப் படிவத்தின் இலக்கம் 01 முதல் 06 வரையான பகுதிகளை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 07 முதல் 8.2 வரையான பகுதிகளை இரண்டாம் பக்கத்திலும், இலக்கம் 8.3 முதல் 11 வரையான பகுதிகளை மூன்றாம் பக்கத்திலும், இலக்கம் 12 முதல் 14 வரையான பகுதிகளை நான்காம் பக்கத்திலும் A4 அளவுள்ள தாள்களில் தயாரிக்கவும்.) மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்கள் மற்றும் முழுமையற்ற தகவல்களுடன் கூடிய விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் ஒரு புகைப்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பது போதுமானது.

II. **விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முறை மற்றும் விண்ணப்ப ஏற்புக்கான இறுதித் திகதி :**

விண்ணப்பங்கள் 2026.06.05 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். பணிப்பாளர் நாயகம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு - 10. குறிப்பிட்ட தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு" என தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

III. தற்போது அரச சேவையில் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் :

தற்போது அரச சேவையில் கடமையாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை, தாங்கள் கடமையாற்றும் நிறுவனத்தின் தலைவரின் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

IV. **விண்ணப்பங்களைச் சான்றுப்படுத்தல் :**

தற்போது அரச சேவையில் கடமையாற்றும் விண்ணப்பதாரர்களின் கையொப்பம், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவர் அல்லது அவருக்குப் பதிலாக சான்றுப்படுத்துவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட ஓர் அதிகாரியினால் சான்றுப் படுத்தப்பட வேண்டும். ஏனைய விண்ணப்பதாரர்களின் கையொப்பங்கள், அவற்றைச் சான்றுப்படுத்துவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் பின்வருவோரில் ஒருவராக இருக்க வேண்டும். சமாதான நீதவான் / சத்தியப் பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி/ நொத்தாரிஸ் / அரசாங்கப் பாடசாலையின் அதிபர்/ கடற்படை/ விமானப்படை/ இராணுவத்தில் பதவிநிலை அதிகாரி / அரசாங்க நிரந்தர சேவையில் உள்ள ஒரு பதவிநிலை அதிகாரி / பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது நாயக்க தேரர் ஏனைய மத வழிபாட்டுத் தலங்களுக்குப் பொறுப்பான அல்லது மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க நிலைமையிலுள்ள ஒருவர்.

11. **தவறான தகவல்களை வழங்குதல்**

விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள ஏதாவது விடயம் தவறானது அல்லது பொய்யானது என கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும்போதோ அல்லது அதன் பின்னரோ எந்நேரத்திலும் கண்டுபிடிக்கப்பட்டால், அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். ஆட்சேர்ப்புக்குப் பின்னர் அத்தகைய தகவல்கள் வெளிப்பட்டால், அவர்/அவள் உடனடியாக சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு அது காரணமாக அமையும்.

12. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத வேறு ஏதேனும் பொருத்தமான விடயங்கள் இருக்குமாயின், அவை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் விருப்பப்படி தீர்மானிக்கப்படும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில அறிவிப்புகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு ஏற்படுமாயின், சிங்கள மொழி அறிவிப்பே செல்லுபடியாகும்.

பணிப்பாளர் நாயகம்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு – 10,
2026, மே 07.